விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 57 ஆவணி 14 ஜுல்கஜ் 13 இதழ் 201
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-8-1985

## சந்திரகாசன் சென்னை திரும்பினர்! "நடந்ததை மறப்போம்"

(சென்னை)

நாடு கடத்தப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்த் தலைவர் திரு எஸ். ஸி சந்திரகாசன் மீதான உத்தரவை இந்திய அரசு விலக்கிக்கொண்டுவிட்டது.

இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்புகளைத் திருப்தி செய்யும் வகையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண்பார் என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாக திரு சந்திரகாசன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் எடுக்கும் முயற்சிகளுக்குத் தாம் முழு ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

திரு சந்திரகாசன் விடுதலை

8-ம் பக்கம் பார்க்க)

★ சந்திரகாசன் தடை உத்தரவு நீக்கத்தின் எதிரொலி

# பாலசிங்கம் மீதான வெளியேற்ற உத்தரவும் வாபஸாகலாம்!

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட டாக்டர் எஸ். ஏ. பாலசிங்கம், எந்த நேரத்திலும் சென்னை திரும்பலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

டாக்டர் பாலசிங்கம் இந்தியா திரும்பும் பட்சத்தில் அவர் மீதான தடை உத்தரவு நீக்கப்படலாம் என்று புதுடில்லியில் நேற்று விஷய மறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன,

டாக்டர் எஸ். ஏ. பாலசிங்கத்துக்கும் திரு. எஸ். ஸி. சந்திரகாசனுக்கும் கடந்த இருபத்து மூன்றும் திகதி இரவு ஏழரைமணியளவில் நாற்பத்து எட்டு மணிநேர நாடு கடத்தல் உத்தரவு வழங்கப் பட்டது தெரிந்ததே.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டாக்டர் பாலசிங்கம் லண்டனுக்கும், திரு சந்திரகாசன் நியுயோர்க்குக்கும் சென்றிருந்தனர்.

டாக்டர் பாலசிங்கத்தின் மீது இந்தியஅரசு விதித்துள்ள தடைஉத்தரவு குறித்து புதுடில்லியில் அரசு வட்டாரங்கள் நேற்றுத் வெளியிடுகையில்; டாக்டர் பாலசிங்கம் தமது நிலைகுறித்து இந்திய அரசுக்கு அறிவித்து நாடுகடத்தல் பற்றிய உத்தரவை வாபஸ் பெறுமாறு

(8 ம் பக்கம் பார்க்க)

## 'இலங்கையின் 'பணிப்பின்' மீது நான் நாடு கடத்தப்பட்டேன்!"

### லண்டனில் பாலசிங்கம்.

(லண்டன்)

"இலங்கை அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்குமுன் நிபந்தனையாக மீண்டும் இந்தியாவுக்கு நான் அழைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கின்றேன்" என்று இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டுலண்டனில் தங்கியிருக்கும் டாக்டர் எஸ் ஏ.பாலசிங்கம்நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டாக்டர் எஸ் பாலசிங்கம் மேலும் கருத்து தெரிவித்துள்ளதாவது; "என்னை இந்தியாவிலிருந்து வெளியேற்றியது இந்திய அரசு விட்ட தவறாகும். 'தி பு' பேச்சுக்களில் தமிழ்ப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கு நானே தடையாகஇருப்பதாகக் கருதியே இலங்கைஅரசு என்னை வெளியேற்றுமாறு இந்திய அரசைக் கோரியருக்கிறது. இதனை அடுத்தே நான் வெளி

(8-ம் பக்கம் பார்க்க)

## திரியாய் குச்சவெளி மக்கள் திருமலைக்கு வரமுடியாத நிலை!

(திருகோணமலை)

திரியாய் சாம்பல்தீவு குச்சவெளிபகுதியில் உள்ள தமிழ் மக்கள் திருகோணமலை நகருக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

சிலர் வள்ளத்தில்நகரத்திற்கு வந்து தங்கள் உணவுப் பொரு

8 ம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி இன்று போராட்டம்

(சென்னை)

"தமிழ் ஈழ ஆதரவாளர்கள் கழகம்' இன்று நடத்தவிருக்கும் ரயில் நிறுத்தப் போராட்டத்தை திட்டமிட்டபடி நடத்தவுள்ளதாக தி மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சென்னையில் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

(8-ம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. தொண்டர் தீக்குளித்தார்!

(சென்னை)

தமிழர் தலைவர்களான திரு. எஸ். ஏ. பாலசிங்கம், திரு.சந்திரகாசன் ஆகியோர் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத தெரிவித்து 45 வயதான தி. மு. க. தொண்டர் ஒருவர் தீக்குளித்துள்ளார்.

தீக்குளித்தபோது அவர் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் அவர் இப்போது ஆபத்தான நிலையிலுள்ளார்.

## எம். ஜி. ஆர். - ஈழம் தேசிய விடுதலை முன்னணி சந்திப்பு

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரனும் அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் திரு கருப்பையா மூப்பனரும் நேற்று ஈழம்தேசியவிடுதலை முன்னணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

முதலமைச்சரின் இல்லத்தில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தைகள் ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களை பிரதமர் திரு.ராஜீவ்காந்தியைச் சந்திக்கசெய்வதற்கான மேற்படி இருதலைவர்களும் இணைந்து செய்த ஒருமுயற்சியாகவே கருதப்படுகின்றது.

சுமார் இரண்டுமணி நேரம் நடந்த இச்சந்திப்பின்போது

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரத 2-ம் கட்டம் இன்று காலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக மேற்கொளளும் உண்ணாவிரதம் நேற்று 3 வது தினமாக இடம்பெற்றது,

நேற்றுமாலை 5 மணியுடன் முதற்கட்ட உண்ணாவிரதத்தை முடித்து 2ம் கட்ட உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கவிருந்தபோது. முதற்கட்ட உண்ணாவிரதிகள் தாம் தொடர்ந்தும் போராட்டத்தை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்ததன் பேரில் இன்று காலை 9 மணிவரை முதலாம கட்ட போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

உண்ணாவிரதிகள் களைப்புற்ற நிலையில் இருபபினும் அவர்களின் உடல் நிலையில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் உண்ணாவிரதிக

(8-ம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதி ஓய்வு பெறுகிறர்

(கொழும்பு)

இலங்கையின் முப்படைகளின் கூட்டுத்தலைமைப் பீடத் தளபதி லெப்டினட் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்கா தமது இராணுவ சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

## பூட்டானில் இனிமேல் பேச்சு நடக்காது!

(சென்னையிலிருந்து நமது சிறப்புநிருபர்)

பூட்டான் தலைநகர் திம்புவில் இனிமேல் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடிய சாத்தியம் இல்லை என்று சென்னையிலிருந்து நேற்றுக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் வலியுறுத்தின.

இலங்கை இனப்பிரச்னை சம்பந்தமாக பூட்டானில் இரண்டு தடவைகள் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும் அடுத்த சுற்றுப்பேச்சு திம்புவில் உடனடியாக நடைபெறக்கூடிய சூழ்நிலை' நிச்சயமாக இல்லை என்று தெரிவித்த ஒரு நம்பகமான வட்டாரம்; அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை எங்கு, எப்பொழுது நடைபெறும் என்பதும் இப்பொழுது கேள்விக்குறியாகவே இருக்கிறது என்றும் கூறியது.

# விளம்பரம்

## தேவை

நல்ல ஆதாயமுள்ள வியாபாரத்தில் ரூ 50 000/- போட்டுபங்காளர் தேவை. 4 வீத வட்டியும், நயத்தில் பங்கும். லைலட் இன்ஸ்ரிடியூட், 151, செம்மணி றோட். நல்லூர் 293

7-ம் ஆண்டுக்கு உட்பட்ட நான்கு பிள்ளைகளுக்கு கல்வி போதிப்பதற்கு க. பொ. த (உயர்தரம்) விஞ்ஞான சித்தி எய்திய பெண்பிள்ளை தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். 1-9-85 மாலை 3 மணிக்குச் சான்றுப் பத்திரத்துடன் தொடர்புகொள்ளவும்: N K. நடராசா, பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் 288

வேப்பம் விதை இலுப்பம் விதை தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற். யாழ்ப்பாணம். 291

எமது ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள T. V. Deck, மற்றும் சகல றேடியோக்களும் திருத்தக்கூடிய ரெக்னீஷன் தேவை சாயி ரெலிரேப் பிரதான வீதி. அச்சுவேலி 290

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மின்தறி ஒன்று கமிஷனுக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விளம்பர இல. 176, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 176

சுண்டிக்குளியில் மெயின் றோட்டில் வீடு. காணி உடன் விற்பனைக்கு. அத்துடன் ஜெனரேட்டர், மைக்கிறவேவ் அவன் குக்கர், T. V. லைலட் இன்ஸ்ரிடியூட், 151, செம்மணி றோட், நல்லூர். 294

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. க. சண்முகம் (இராசா)

மலர்வு: 6-10-1946 உதிர்வு: 9-9-1984

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டு மறைந்து
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு என்றென்றும் மறையாது.
உங்கள் அன்பை நினைவு கூர்ந்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி: தவமணி,
பிள்ளைகள்: சசிகுமார் (கண்ணன்),
பிறேமினி, யசோதரன்

பாரதிபுலம், திருநெல்வேலி. (295)

# இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 14 [1985-8-30]
கிழமை- வெள்ளி
திதி- பூரணை பி. ப. வரை
நட்சத்திரம்- சதயம்
பி. இ வரை

மேடம்- அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். விழிப்புடன் இருக்கவும்.

இடபம்- திடீர் திருப்பங்கள் ஏற்படும். அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியிலும் ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்- எதிர்பாராத பொருள் வரவுக்கு இடமுண்டு. பூமியால் லாபம் கிடைக்கும். புத்திரர் வழியாலும் நன்மையுண்டு.

கடகம்- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். சிலருக்கு ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

சிங்கம்- வெற்றி உமதருகில் விரைந்து வரும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். களஸ்திரவழியாலும் நன்மைகள் சேரும்.

கன்னி- எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடக்கூடும். அவதானம் நன்று.

துலாம்- உறவுமுறை பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர். வாழ்த்தும் உண்டு.

விருச்சிகம்- வித்தையில் வெற்றி காணும். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் பொருள்வந்து சேரும்.

தனுசு- வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம்போல் மணம்பரப்பிக் கொண்டிருக்கும். காதல்சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிகரமானதினம்.

மகரம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையைவிரிக்கக்கூடும்.

கும்பம்- அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

மீனம்- சோதனைகளுக்கு மத்தியில் திருப்தி ஏற்படும். பெரியோர்களும் ஆசிகூறுவர். பெரும் புகழும் வந்துசேரும்.

திருமலை
- வே. ரவீந்திரன் -

## திருத்தேர் வெள்ளோட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் புதிய சித்திரத் திருத்தேர் வெள்ளோட்ட விழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

யாழ். திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியாரினால் உருவாக்கப்பட்ட மேற்படி இந்தச் சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நேற்றுமுன்தினம்பிற்பகல் நடந்தபோது பெருந்திரளான பக்தர்கள்கலந்துகொண்டனர். நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறப்புரை வழங்கினார்.

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் (கூளி) கோவில் வரலாற்றை எடுத்துக்கூறும் 'போர்த்தேங்காய்' நூல் வெளியீட்டுவிழாவும் நடைபெற்றது. கோவில் முன்றலில், பண்டிதர் நா. இராசையா தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டுவிழாவில், முதல் பிரதியை சிவதர்ம வள்ளல் க. கனகராசா பெற்றுக்கொண்டார்.

## தன்னலம் கருதாப் பண்பாளன்



சாவகச்சேரி தனங்கிளப்பில் கல்வியாலும் சமூகசேவைகளாலும் முன்னணியில் திகழ்ந்த புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்து மிக இளமைக்காலத்திலே பலரும் போற்றும் விவசாயி எனப்பேர் எடுத்த சிறிகந்தவேள் மறைந்து ஓராண்டு ஆகிறது.

கள்ளமில்லாத சிரிப்பும், எந்த நேரத்திலும் பிறருக்கு உதவும் மனோபாவமும் கொண்ட இவர் கால்நூற்றுண்டுகளுக்குமேல் கல்விச் சேவைக்கும் பொதுப்பணிக்கும் சமயப்பணிக்கும் அர்ப்பணித்த பெருமகனார் வித்துவான் சரவணமுத்து கந்தையாவின் புதல்வராவார்.

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமான சிறிகந்தவேள் குடும்பத்தின் ஒளிவிளக்காக மட்டுமன்றி அயலவர்களை அன்புடன் நேசித்து அவர்கள் குறைபோக்கும் வள்ளலாகவும் திகழ்ந்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துவந்த பாலியாறு என்னும் காட்டுக் கிராமத்தை காடழித்து விவசாய பூமியாக்கி முன்மாதிரி விவசாயக் கிராமமாக ஆக்க அரும்பாடுபட்டார். அம்முயற்சியிலும் வெற்றி கண்டார்.

பாலியாறு என்னும் விவசாயக் கிராமம் முன்னேற்றம் காண வேண்டும். சமுதாயத்தில் வறிய மக்கள் முன்னேற வேண்டும் என்ற இலட்சியவாதியாகத் திகழ்ந்தார்.

- நண்பன்

## சைவ உலகிற்கு பெரும் இழப்பு

பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை அம்மையார் அவர்கள் அண்மையில் சிவபதமடைந்தமைஒரு துன்பநிகழ்ச்சியாகும் அம்மையார் ஆசிரியையாகக் கடமையாற்றி சைவத்தமிழ் மக்களுக்குப்பல தொண்டுகளைப் புரிந்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் ஒரு சீவியகால அங்கத்தவராக இருந்து தொண்டாற்றினார். சைவ மாநாடுகளிலும் ஏனைய சமயநிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிச் சிறந்த விரிவுரைகள் ஆற்றியிருக்கின்றார். சைவப்பரிபாலன சபையில் திரு. க. சிவபாதசுந்தரம் பிள்ளை தினம் கொண்டாடிய காலங்களில் அம்மையார் அவருடைய தந்தையார் திரு. வே. மாணிக்கவாசகர் அவர்களோடு வந்திருந்து விரிவுரை ஆற்றியும் பண உதவி புரிந்தும் கொண்டாடிச் சென்றனர் திரு சு சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் அம்மையாருடைய பேரனுவார். அம்யாருக்கு திரு. சிவபாதசுந்தரம் பிள்ளை தமிழ் சைவசித்தாந்த அறிவுகளைப்புகட்டினார். சிறியேன் பசுப்பாதுகாப்பு இயக்கத்தை நடத்திய காலங்களில். அம்மையார் சிறியேனுடன் யாழ்பாணத்தில் பல இடங்களுக்குவந்து பசுபாதுகாப்பும் பிரசாரவிரிவுரைகள் ஆற்றினார்

அரசாங்கத்தால் பிரசுரிக்கப்பட்ட சைவநெறி என்ற நூலில் காணப்படும் சைவத்திற்குமாறான. கருத்துக்களைத் திரட்டி ஒரு அறிக்கையை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குச சமர்ப்பித்தார். சைவபரிபாலன சபையார் அந்த அறிக்கையை வித்தியா பகுதிக்கு அனுப்ப வேண்டிய திருத்தங்களைச் செய்யும்படி கேட்பதற்கு முயற்சி செய்கிறார்கள்.

அம்மையாருடைய மறைவு சைவதமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும் அம்மையாருடைய ஆத்மா சாந்தியடைக.

மு. மயில்வாகனம்
(முன்னாள் சமயப்பிரசார அமைச்சர் சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை- இராமாவில் மகிழ் நின்றவளவு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2ம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு மேல் நிகழவிருக்கின்றது.

சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக் குருக்கள் கிரியைகளை நடாத்தி வைப்பார். (ப)

## இப்படி ஒரு அபிஷேகம்

(கல்வியங்காடு)

சிறிய கொள் கலன்களில் கசிப்பு நிரப்பி கடதாசிப்பெட்டிகளில் மூடி மறைத்துக் கொண்டு அரியாலை கனகரெத்தினம் வீதியூடாகச்சென்ற இருவரிட மிருந்து' கசிப்பை பறிமுதல் செய்த ஒரு இளைஞர் கோஷ்டி அந் தக்கசிப்பை அவர்கள் இருவர் மீதுமஊற்றிவிட்டுச்சென்றனர்

## திருமுறை பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வெள்ளி விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே திருமுறைப் பண்ணிசைப்போட்டியொன்றை மேற்படி சங்கம் நடத்தவுள்ளது. இப்போட்டிகள் மேற்பிரிவு மத்தியபிரிவு கீழ்ப்பிரிவு என்று வெவ்வேறாக நடைபெறும்.

## கிளாலி காவலர்



'நல்லாரைக் காண்பதுவும் நல்லார் சொற் கேட்பதுவும் நல்லாரோடு இணங்கியிருப்பதுவும் நன்று' என்பது ஆன்றோர் மொழி அமரர் கிருத்தோப்பிள்ளை மிக்கேல்பிள்ளை சூசைப்பிள்ளை கிளாலி காவலரை கண்டு உரையாடி அவரோடு உறவாடி வாழும் பாக்கியம் பெற்றபலரில் நானும் ஒருவன். அமரர் 29-07-85ல் , திடீர் மறைவு அவரை அறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் நெகிழச்செய்துவிட்டது.

பாலர் முதல் பல்லிழந்த பாப்பாவரை இன்சொல் இன்செயல் மூலம் அனைவரதும் உள்ளத்தைக் கவர்ந்தார். சாந்தம் தவழும் சிரித்த முகத்தினால் சாதனைகள் பலபுரிந்தார். கிளாலி ஊரின் முடிசூடா விவசாய மன்னனைத் திகழ்ந்தார்.

சமயம் என்பது வார்த்தையில் அல்ல, வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டினார். தெய்வ பக்தியும் குடும்பப்பற்றும் சமூகப்பற்று மிக்கவராகத்திகழ்ந்தார். அன்பர்கள்மேல் மிகுந்த அன்புள்ளம் கொண்டவர். அமரரின் மனையைப் 'பசிப்பிணிமருந்துஇல்லம்' என்று அழைப்பதுவும் சாலவும் பொருந்தும் ஏனெனில் விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழுகிறது.

பலரது இழப்பு அவர்களது குடும்பம் என்ற சிறிய வட்டத்தை மட்டுமே பாதிக்கும். சிலரது இழப்போ குடும்பம் என்ற எல்லையைக் கடந்து சமயம், சமூகம் என்ற பெரிய வட்டங்களை உள்ளடக்கிய அனைவரையும் பாதிக்கும் அத்தகைய சிலரில் ஒருவரே கிளாலிப்பதியின் காவலர் திரு. கி. மி. சூசைப்பிள்ளை.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானவன் மலரடி சென்ற அவரது ஆன்மா சாந்தியடைய கிளாலி புனித மிக்கேல் ஆலயத்தில் கடந்த புதன் கிழமை இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது

துரை. ஆரோக்கியதாசன்

## தனியார் லொறி மீது துப்பாக்கிப் பிரயோகம்

(வவனியா)

முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிச்சென்ற தனியார் லொறி மீது பாதுகாப்பு படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

லொறியை நிறுத்துமாறு கட்டளையிட்டும் லொறி நிறுத்தப்படாமல் சென்றதினாலேயே படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

வவனியா—பள்ளிவாசலுக்கு முன்பாக இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

லொறிச் சாரதியும் கிளினரும் காயமின்றி தப்பிச் சென்றுள்ளனர். லொறி பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது.

## உண்ணாவிரதத்திற்கு ஆதரவளியுங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் வதைபடும் இளைஞர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கும் அதற்கு ஆதரவாக பல்கலைக்கழகத்திலும் பிறஇடங்களிலும் நடைபெறும் உண்ணாவிரதத்திற்கும் ஆதரவளிக்குமாறு தமிழ் மக்கள் விடுதலைச் சேனை வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

## கேப்ரவுணில் சிறைக் கூடம்வரை ஊர்வலம்

# பொலிஸ் சூறுக்கீட்டில் 5 பேர் பலி!

# 30 பேர் கைது; பலர் காயம்!!

**கேப்ரவுண், ஆகஸ்ட் 29**

**கடந்த புதன்கிழமை கேப்ரவுணில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் தென்னுபிரிக்கப் பொலிஸாராலும், துருப்புக் ளாலும் கலைக்கப்பட்டது. அப்போது இடம்பெற்ற வன்முறைகளில் 5 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். 80 பேர் வரை காயமடைந்தனர். 30 பேர் கைதுசெய்யப்பட்டனர்.**

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத் தலைவர் திரு நெல்சன் மன்டேலா சிறைவைக்கப்பட்டுள்ள கேப்ரவுண் சிறைக் கூடம் நோக்கியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

பொலிஸாரும், துருப்புகளும் கண்ணீர்ப் புகைப்பிரயோகம், பிளாஸ்டிக் குண்டுப் பிரயோகம் என்பவற்றை நடத்தி இந்த ஊர்வலத்தை தடுத்தனர்.

இத் தடுப்பு முயற்சியின் போது நிகழ்ந்த கைகலப்பில் ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிஸார்மீது பெற்றோல் குண்டுகளை வீசினர்.

பொலிஸார் கட்டதில் 5 ஆர்ப்பாட்டக்காரர்கள் பலியானூர்கள் சுமார் 80 பேர் வரை சூடுபட்டுக் காயமடைந்தனர். பொலிஸ் தரப்பிலும் 6 பேர்வரை காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பிரமாண்டமானமுறையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது: 20 ஆயிரம் பேர் கலந்து கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆயினும் இதன் ஏற்பாட்டாளர் டாக்டர் அலன்புஸாக் கைதானதையடுத்து பிரமாண்டமான முறையில் இவ் வூர்வலம் அமையவில்லை இருந்தபோதிலும் பலர் இதில் கலந்துகொண்டு திட்டமிட்டவாறு இதனை நடத்த முயற்சித்தனர்.

பொலிஸார் இவ் ஊர்வலத்தை தடுத்தபோது கிறிஸ்தவப் பாதிரிமார் சிலர் குறுக்கிட்டு சமரசம்செய்ய முற்பட்டனர். ஆனுல் அப் பாதிரிமாரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த ஊர்வலத்தைத் தடுக்கும் முயற்சி பொலிஸாருக்கு வெற்றியளித்துள்ளதென்றே தெரிவிக்கப்பட்டது. (கி)

## நைஜீரிய நாட்டுநிலைமை வழமைக்குத் திரும்புகிறது!

லேகோஸ், ஆக-29

நைஜீரியாவில் நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு இடம்பெற்ற ஆட்சிமாற்றம் குறித்து மக்கள் அதிகம் அக்கறைகொண்டவர்களாகக் காணப்படவில்லை.

புதிய ஆட்சியாளர்கள் முன்னைய அரசாங்கத்திலிருந்த 4 பாதுகாப்பு அமைச்சு முக்கியஸ்தர்களைத் தொடர்ந்து பதவியில் வைத்துள்ளது இவர்களில் ஒருவர் புதிய இராணுவத் தளபதியாகியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் எதுவும் இடம்பெறமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உரியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னுள் அதிபர் மொஹமட் புஹாரி கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர்த் தொலைபேசிச் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன ஆயினும் வெளிநாட்டுத் தொலைத்தொடர்பு தொடர்ந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

ஆகாய, கடல், தரைமார்க்க எல்லைகள் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. (கி)

## அலுவலரைக் காணவில்லை

(வவனியா)

கடமைக்குச் சென்ற விசேட சேவை அலுவலர் ஆ. பூபாலசிங்கத்தை காணவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

பெரிய புளியங்குளம் பிரிவைச் சேர்ந்த மேற்படி அலுவலர், சின்னத்தம்பனைக்குக் கடமைக்குக் கடந்த 23-ம் திகதி சென்றவர் என்றும் இன்னும் வீடு திரும்பவில்லை என்றும் செட்டிகுளம் சமாதானக் குழுத் தலைவர் திரு. செ அப்புத்துரை வவனியா பிரஜைகள் குழுத் தலைவரிடம் புகார் தெரிவித்துள்ளார்.

## உலகச் செய்திகள்

## மகாத்மா வசித்த பகுதியில் லட்சக்கணக்கில் சேதம்!

கேப்ரவுண், ஆகஸ்ட் 29

தென்னுபிரிக்காவில் மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்தபகுதி பல லட்சக் கணக்கான ரூபா சேதத்துக்குள்ளாகியுள்ளது. அண்மையில் இடம்பெற்ற கலவரங்களில் இந்த ஆச்சிரமப் பகுதியில் ஒரு பாடசாலையும், 5 கட்டிடங்களும் சேதமாக்கப்பட்டன.

இத்தகவலை மகாத்மாகாந்தியடிகளின் பேத்தியாரான திருமதி ஈலா ரங்கோவின் தெரிவித்தார்.

சேதமாக்கப்பட்டவற்றில் ஒரு குடிசைத் தொகுதி, நூல்நிலையம், ஒரு அச்சகம் ஆகியவைவற்றுடன் காந்தியடிகளின் மனைவியின் பெயரில் அமைந்த கஸ்தூரிபா பாடசாலை என்ற கல்விநிலையமும் அடங்குகின்றன.

தென்னுபிரிக்காவில் குடியேறியுள்ள இந்திய இனத்தவர் மீது கறுப்பினத்தவர் நடத்திய தாக்குதல்களின் போதே இச்சேதங்கள் ஏற்பட்டன. (கி)

## படகில் வந்த பாலஸ்தீன கெரில்லாக்கள் கைது!

ரெல்அவிவ், ஆக-29

இஸ்ரேலிய கடற்படை பாலஸ்தீன கெரில்லாப் பிரிவு ஒன்றைக் கைதுசெய்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேலிய கடற்பகுதியில் படகு ஒன்றில்வைத்து இக்கெரில்லாக்கள் கைதானூர்கள். இவர்கள் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்தின் அல்பட்டா இயக்கப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது

தென் லெபனானுக்குக் கடல் மார்க்கமாக நுழைந்து வட இஸ்ரேலியப் பகுதியில் தாக்குதலை நடத்துவதே இக்கெரில்லாப் பிரிவின் நோக்கமென்று கூறப்பட்டது.

இவர்கள் அல்ஜீரியாவில் பயிற்சிபெற்றவர்களாம் பாரசூட் பாய்ச்சல் பயிற்சியும் இதில் ஒன்றுகும் என்று இவர்கள் மீதான விசாரணைகளின் போது தெரியவந்தது.

இரு ஐரோப்பியர்களும் இப் பாலஸ்தீனியர்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆயினும் அவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இதேவேளை தென் லெபனுன் பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் ஊடுருவல் ஒன்றை மேற்கொண்டது. இதில் அப்பகுதியிலிருந்த வீடொன்று நாசமாக்கப்பட்டதுடன் தேடுதலும் நடத்தப்பட்டது.

வட இஸ்ரேலிய இராணுவ நிலைமீது இரு ராக்கட் தாக்குதல்கள் இப்பகுதியிலிருந்து நடத்தப்பட்டதே இந்த ஊடுருவலுக்குக் காரணமென்று இஸ்ரேலியபாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது. (கி)

## ஆந்திராவில் வைரம்!

சென்னை, ஆகஸ்ட் 29

ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணு மாவட்டத்தில் வைரக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன,

இம்மாவட்டத்தின் சற்ராலபடு என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே பெருந்தொகையான வைரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

சுமார் 100 சதுரகிலோ மீட்டர் பரப்பில் இவ் வைரக்கற்கள் இருக்கக் காணப்பட்டன. இத்தகவலை ஆந்திர மாநில சுரங்கத் தொழில் அமைச்சர் திரு சத்தியநாராயணன் சட்டசபையில் தெரிவித்தார்

கனிப்பொருள், புவியியல் ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வினை அம மாவட்டத்தில் மேற்கொண்டனர், (கி)

## பஞ்சாப் தேர்தல்கள்

# ஆயிரக்கணக்கானேர் போட்டியிட முடிவு!

புதுடில்லி, ஆக-29

பஞ்சாப் மாநிலத் தேர்தல்களில் போட்டியிட ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் முன்வந்துள்ளனர். செப்டம்பர் மாத இறுதிப்பகுதியில் இம் மாநிலத்தில் சட்ட-லோகசபைகளுக்குத் தேர்தல்கள் இடம் பெறவுள்ளன.

இந்திரா காங்கிரஸ் சார்பில் சுமார் ஆயிரம் பேர் சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட விருப்பந் தெரிவித்துள்ளனர் அகாலிதள் கட்சி சார்பில் சுமார் 700 பேர் முன்வந்துள்ளனர்.

அண்மையில் அகாலிதள் தலைவர் லோங்கோவால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து இம் மாநிலத்தில் தேர்தல்கள் பகிஷ்கரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது ஆனுல் அதிகளவிலான வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்தல்கள் திட்டமிட்டவாறு நடைபெறக்கூடிய தன்மையை வெளிப்படுத்தியுள்ளன.

ஒரு தொகுதியில் 15பேர் வீதம் வேட்பாளர்கள் போட்டியிட முன்வந்துள்ளனர். இதேவேளை 'ஐக்கிய அகாலிதள்' என்ற புதிய கட்சி இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பொற்கோயிலில் கொல்லப்பட்ட பிந்ரன்வாலேயின் தந்தை பாபா ஜோகீந்தர்சிங் இக்கட்சியின் தலைவராவார். இவரது கட்சியின் மேற்குறிப்பிட்ட முடிவு இதன் உறுப்பினர்கள் சிலரை இதிலிருந்து விலகச்செய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

## ரயில் சேவை ரத்து பரீட்சார்த்திகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ரயில்சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் அடுத்தமாதம் 2ம் தேதி முதல் 16 ம் தேதி வரை நடைபெறும் சட்டப்பட்ட பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலுள்ள சுமார் 50 பரீட்சார்த்திகள் தோற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் எம் பஞ்சலிங்கத்தை நேற்று முன்தினம் சந்தித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த பரீட்சார்த்திகள் நிலைமையை எடுத்து கூறினூர்கள்.

இச் சந்திப்பைத்தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தினுல் நடாத்தப்படும் சட்டப் பட்டப் பரீட்சைகளில் தோன்றும் பரீட்சார்த்திகள் இன்று வெள்ளிக்கிழமைகாலை9 மணிக்கு அரசாங்க அதிபரை சந்திப்பதற்காக யாழ். செயலகத்தில் கூடுமாறு வெலிவாரி சட்டப் படிப்பு சங்க செயலாளர் தி. ரி ஏ அன்ரனிப்பிள்ளை கேட்டுள்ளார். (க)

## ரூ 3 லட்சம் கொள்ளை

(வவனியா)

வவனியா கண்டி வீதியிலுள்ள தங்கவேல் அரிசி ஆலையில் சூறையாடப்பட்ட பொருள்களின் பெறுமதிசுமார் மூன்று லட்சம் என்று மதிப்பிடபட்டுள்ளது.

இந்த மில் உரிமையாளருடைய வீடும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நெல், அரிசி, சாக்கு ஆலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் ஆலையிலிருந்து சூறையாடப் பட்டுள்ளதாக ஆலை உரிமையாளர் கூறினூர்.

### மணிவாக்கு

ஒரு பெரும் பொய்யானது ஒரு பெரிய மீன் நிலத்தில் கிடப்பதுபோல அது துள்ளும், எரிச்சல் மூட்டும், பயங்கர பரபரப்பையும் ஏற்படுத்தும். ஆனால் உன்னை ஒன்றும் செய்து விடாது. நீ அமைதியாய் இருக்க வேண்டும், அவ்வளவுதான் அது தானே செத்துவிடும்.

— ஜோர்ஜ் கிராப்டே.

# நமது நோக்கு

## நீதிமன்றில் நிறுத்து; அல்லது விடுதலை செய்!

திக்காலை சிறை முகாமில் 18 மாதங்களுக்கு மேல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் தம்மை நீதிமன்றின் முன்னால் நிறுத்தி விசாரணைக்குட்படுத்தும்படியும் இல்லையெனில் விடுதலை செய்யும்படியும் கோரி கடந்த 8ம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்திருந்தனர்.

அவ்வாறு செய்த ஆறு இளைஞர்கள் பின்னர்வெலிக்கடைச் சிறைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், அவர்கள் தொடர்ந்தும் தமது உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருவதாகவும், ஆனால் அரசோ அட்டோர்னி ஜெனரல் திணைக்களமோ அவர்களின் கோரிக்கை பற்றி எதுவித அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லையென்றும் தெரியவருகின்றது.

21 நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதம் இருந்து வரும் இவ்விளைஞர்களின் நிலையென்ன என்பதையாகுதல் அதிகாரிகள் அறிவிக்காமல் இருக்கின்றனர்.

இந்த நாட்டு அரசியல் அமைப்பின் 13வது ஷரத்தின் 2வது விதியின்படி "காவலில் வைக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு அல்லது வேறு விதமாக தன் உரிமை மறுக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபரும் சட்ட நடைமுறைக்கேற்ப அதிகாரமுள்ள தகுதி பெற்ற நீதிமன்றம் ஒன்றில் தோற்றுவிக்கப் படவேண்டும்..."

அசாதாரண நிலைமைகளில் பயங்கரவாதத்தடை சட்டத்தின் 9வது ஷரத்தின் முதலாவது உப விதியின் பிரகாரம், கைது செய்யப்படும் ஒருவர் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில் மூன்று மாதங்களுக்கு தடுப்புக்காவலில் வைக்கப்படலாம். மூன்று மாதங்களுக்கொரு முறை அமைச்சரின் அவ்வாறன உத்தரவு பெறப்பட வேண்டும். என்றாலும் 18 மாதங்களுக்குமேல் அவ்வாறன உத்தரவு செல்லுபடியாகாது.

அதாவது 18 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர் ஒரு நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர் அவர் விளக்க மறியலில் அன்றி தடுப்புக்காவலில் வைப்பதற்கும் சட்டத்தில் இடமில்லை.

சட்ட நிலைமை இவ்வாறு இருக்கும்போது; இவ்விளைஞர்கள் விடயத்தில் அதிகாரிகள் இன்னமும் ஏன் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள்?

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் எனின் நீதிமன்றம் முன்னால் அவர்களை நிறுத்துவதற்கு தயக்கமேன்?

அரசியல் சட்டத்தின்படி மாத்திரமல்ல; பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்படியும்கூட நீதிமன்றவிசாரணையின்றித் தம்மைக் காவலில் வைத்திருப்பது தவறென்பதைச் சுட்டிக்காட்டவே அவர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தலைப்பட்டனர்.

அவர்களின் சட்டரீதியான கோரிக்கையை மனிதாபிமானத்துடன் அணுகி உடனடியாகச் செயற்படுவது அதிகாரிகளின் கடமை.

இல்லையெனில் அநியாயமாக இவ்விளைஞர்களின் உயிர்களைப்பறித்த குற்றத்துக்கு அரசு உள்ளாக நேரிடும்.

சிறைக்குள் நடப்பவை வெளியில் தெரிவதில்லை. எனவே உண்ணாவிரதம் மேற்கொண்டவர்களின் நிலைமைபற்றி அறிய அவர்களின் உறவினர்களும், தமிழ் மக்களும் ஆவலுடனிருக்கின்றனர். வலுவில் உணவு ஊட்டுவதற்கு முயற்சிகள் நடப்பதாகவும்கூறப்படுகின்றது. உணர்ச்சிப் பெருக்குற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 27ம் திகதி தொடக்கம் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்திவருகின்றார்கள். கடந்த 28ம் திகதி இரு மணி நேரம் வேலை இடைநிறுத்தப் போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நிலைமை மோசமானால், போராட்ட நடவடிக்கைகள் பரவலாகக் கூடும்.

எனவே காவலிலுள்ள இளைஞர்களை உடனடியாக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தும்படியும் இல்லாவிடில் எதுவித நிபந்தனையுமின்றி அவர்களை விடுவிக்கும்படியும் நீதியின் பேரால் வற்புறுத்துகின்றோம்.

## நல்லை வாழ் முருகா

அணுகியோர் அவலமெலாம ழிக்கு முருகா
ஆறுபடை வீடுடைய அழகனே முருகா
இருமருங்கி னியதுணை இருக்கவே முருகா
ஈர்த்தெ ம்மையாட் கொண்டு மினியனே முருகா
உடலிலே ஓடுகிற உதிரமாய் முருகா
ஊறுகிற எண்ணமே நீயாகி முருகா
எடுத்த தி வினைதீரத் துணைதாரு முருகா
ஏங்கிடுமை ஏங்கா தேஎன்றிட்ட முருகா
ஐயனே அப்பனே அனைத்துலகு முருகா
ஒளிவளர ஊர் நல்லூ ரிறை வாழு முருகா
ஓங்கார ப்பொருளே நீ! ஒப்பிலா முருகா
ஔடதம் நீ! அடைக்கலம் நாம்! அற்புதா முருகா

— ச. பொ. பாலசிங்கம்

# "சீநோரை மூடும் எண்ணமில்லை அபிவிருத்தி செய்வதே நோக்கம்!"

### — பொது முகாமையாளர்

(எம். ரி சந்திரகுமார்)

"சீ-நோர் நிறுவனம் மூடப்படும் எண்ணம் எமக்கோ அன்றி அரசாங்கத்துக்கோ ஒருபோதுமில்லை. மேலும் நிறுவனத்தை அபிவிருத்தி செய்யவே நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். நிறுவனத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் உதவியளிக்கவிருப்பதாக அரசாங்கமும் கடற்றொழில் அமைச்சும் உறுதியளித்துள்ளன".

தற்போது சீ-நோர் நிறுவனத்தின் அபிவிருத்திவேலைகள் ஸ்தம்பிதமடைந்துவருவதை கருத்திற்கொண்டு சீ-நோர் நிறுவனம் எச்சமயத்திலும் மூடப்படலாமென்று மக்களிடையே பரவலாக பேசப்பட்டுவருவதனால் இது சம்பந்தமாகத் தங்கள் கருத்து என்னவென்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மேற்படி நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு. ஞா. யுகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கருத்துவெளியிடுகையில் கூறியதாவது: கடந்தகாலங்களில் எமது நிறுவனம் பல்வேறுதுறைகளிலும் குறிப்பாகப் படகு உற்பத்தி, வலைஉற்பத்தி, கல்நார் தளபாட உற்பத்தி போன்ற நடவடிக்கைகளிலும் அவற்றின் விற்பனை நடவடிக்கைகளிலும் பெரும் வளர்ச்சியடைந்துவந்தது. எமது நிறுவனத்தின் உற்பத்தி வேலைகளுக்கான மூலப்பொருள்களைச் சுலபமாகப்பெற வசதி வாய்ப்புகள் இருந்தன அதே போல விற்பனை நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

"எமது உற்பத்தியில் 75 வீதமானவை மன்னார், முல்லைத்தீவு, புத்தளம், கொழும்பு நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டன. அப்பகுதிகளில் எமது பொருள்களை அதிக விலை கொடுத்து மக்கள் வாங்கினர். இப்பொருள்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. ஆனால் அண்மைக்காலங்களில் எமது நிறுவனத்தில் பலதடவைகள் நடைபெற்ற கொள்ளைகளால் எமது உற்பத்தி நடவடிக்கைகளை விருத்திசெய்யமுடியாத நிலையேற்பட்டுள்ளது. எனினும் நாம் உற்பத்தியை அதிகரிக்க ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கிவருகிறோம். அதேவேளை போக்குவரத்து சீர்கேடுகளால் வெளியிடங்களுக்குச் சென்று விற்பனை செய்யமுடியாதநிலையில் விற்பனை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. மூலப் பொருள்களைக் கொண்டுவருவதிலும் பல சிக்கல்கள் உருவாகியுள்ளன எனத் தெரிவித்தார்.

காரைநகரில் தற்போது இயங்காமல் ஸ்தம்பித்திருக்கும் சீ-நோர் நிறுவனம் தொடர்ந்தும் செயலற்று இருக்குமா? எனக் கேட்டபோது, "காரைநகரில் படகு உற்பத்தி, கல்நார் தளபாட உற்பத்தி பெரியளவில் மேற்கொள்ளப்பட்டுவந்தன. அங்கும் தொடர்ச்சியாக நடைபெற்ற கொள்ளைகளினால் மூலப்பொருள்கள், உற்பத்திக்கான கருவிகள், ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டன. அதனால் படகு, தளபாட உற்பத்திகளை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. படகுகள் பாரியளவில் உற்பத்திசெய்யவேண்டிய அவசியமிருந்தும் மேற்கொள்ள முடியாதநிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். அங்கு படகு உற்பத்தியில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு குருநகரில் மாற்று வேலைகள் வழங்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்த திரு. யுகேந்திரன். "நூல் திரிக்கும் இயந்திரங்களை அங்கு நிறுவி வேலைகளை மேற்கொள்வதற்கான துரிதநடவடிக்கைகளை எடுத்துவருகிறோம் இதன் மூலம் காரைநகர் சீ-நோர் நிறுவனம் மீண்டும் செயற்படும். இதற்கான முயற்சிகளை கடற்றொழில் அமைச்சும் எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது" என்றார்.

சீ-நோர் நிறுவனம் அரசாங்கத்தால் பொறுப்பேற்று நடத்தப்பட்டுவருகிறதா எனக் கேட்டதற்கு நிறுவனச் சொத்

(5ம் பக்கம் பார்க்க)

### வெள்ளிச்சிந்தனை

## வேதாகமங்கள்

சைவமக்களுக்கு பிரமாண நூல்கள் வேதசிவாகமங்கள். திருமுறைகளும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும் வேதாகமங்களின் கருத்தை நமக்குக் கிடைக்கச்செய்வன. சித்தாந்த சாஸ்திரங்கள் வேதசிவாகமங்களை மறுதலிக்காது அங்கிகரித்து ஏற்றுக்கொள்கின்றன. திருமுறைகளோ வேதசிவாகமங்களையே பின்பற்ற வேண்டும், ஏற்கவேண்டும் என்று உணர்த்துகின்றன.

வேதசிவாகமங்களைப் பரம பிரமாணமாக ஏற்றுப்பின்பற்றி வாழ்ந்த பெருமை நாவலர் பெருமானுக்குரியதாகும். நாவலர் காலத்திலும் அவருக்குப் பின்னரும் பலர் தமக்கு வசதியான தேவைகளுக்கு ஏற்ப வேதசிவாகமங்களைப் பின்பற்றுவது; புறக்கணிப்பது என உள்ளார்கள்.

இவர்கள் தமது இரசனைக்கும் வசதிக்கும் ஏற்ப வேதாகமங்களை விட்டு விலகும்போது வடமொழி- தமிழ்மொழி வேற்றுமை, பிராமணர்களின் சாதிக்கோட்பாடு முதலியவற்றைக் காரணமாகக்கொண்டு வேதாகமங்களை ஏற்கமுடியாமலுள்ளது என்பர்.

திருநீலகண்டத்துப் பாணனார் விடயத்திற் சாதிக்கட்டுப்பாட்டை விலக்கிய திருஞானசம்பந்தர், திருநீலநக்கர் ஆகிய அந்தணர்களான நாயன்மார் வேதாகமங்களை மீறவில்லை. [காரணமென்னவென்றால் இவர்கள் செயலுக்கு வேதாகம சம்மதம் இருந்திருக்கிறது!]

இப்படியான வேதாகமங்களின் கருத்தையும் வாக்கியங்களையும் நோக்கங்களையும் மரபாகவும் சமாதானமாகவும் சிந்திக்க விரும்பாது சைவசமயிகளாகவும் சைவசமயப் பிரமுகர்களாகவும் பலர் இருப்பது சைவசமயிகளுக்கு ஒரு தலைக்குனிவாகும்.

இப்படியான நிலை ஒருபுறமிருக்க;

வேதசிவாகமங்களை முழுக்க முழுக்க பின்பற்ற விரும்புபவர்க்கு தேவையான குருமாரோ-வேதாகமப்புலமை மிக்கவரோ இல்லாமல் இருப்பது சைவசமயிகளுக்குப் பெரும் வறுமையாகவே காணப்படுகின்றது.

சைவசமய மக்களுக்குத் தேவைப்படும் வேதாகமப் பாடசாலை ஏற்படுத்தி விருத்தி பண்ண நம் நாட்டு அரசோ, பொதுநிறுவனமோ முன்வரமாட்டா. நமது சமயத் தேவையை நாமே நிறைவேற்றவேண்டும்.

சோதிடம் சொல்லுதல், அந்தியேட்டி செய்தல் முதலிய தேவைகளுக்கு நமக்குப் பலர் தேவைப்படுதலாலேயே சிலர் நமக்குக் கிடைக்கின்றனர். இவர்களும் சரி குருமாரும் சரி, ஆலய நிர்வாகிகளும் சரி வேதாகம அறிவுடையராயிருந்தால்தான் சமூகத்தில் கௌரவமாய் இருக்கலாம் என்ற நிலைமை உருவானால்தான் நம் சமய சமூகம் சரியான விளக்கமுடையதாய் சிறக்கமுடியும்

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் இன்று வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் பண்டாரக்குள மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் திருமுறை கூட்டுப்பிரார்த்தனை பஜனை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இக் கூட்டுப்பிரார்த்தனைக்கு இசைமணி க. பாக்கியராசா (சித்தி விநாயகர்) தலைமை தாங்குகிறார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5 மணிமுதல் 6: 30 மணிவரை தொடர்ந்து இப்பிரார்த்தனை நடைபெறும் என தெரிய வருகிறது. [ச]

## இன்று தீர்த்தத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாகியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்மன், கண்ணகை அம்மன் ஆலயங்கள். இருநூறு வருஷப் பழமைவாய்ந்த இவ்வாலயங்கள் செந்நெற் கழனிகளின் நடுவே கந்தரோடைப் பெருங்குளத்தின் எதிரே வழுக்கியாற்றங் கரையில் கம்பீரமாக காட்சி தருகின்றன.

ஆலயங்களைச் சார்ந்த அடியார்கள் இலங்கை, மலாயா முதலிய இடங்களில் திரட்டிய பெரும் நிதியைக்கொண்டு ஆலயங்களைப் பெரிதாக அமைத்தும் பெரிய தீர்த்தக்கேணியை அமைத்துப் சிறப்புற வழிபட்டு வந்தார்கள். இடையில் சில வருஷங்கள் நலிவுற்ற இவ்வாலயங்களும் அயலிலுள்ள நாகம்மாள் விநாயகர் ஆலயம் என்பன சமீப காலங்களில் புனரமைக்கப்பட்டு மேலோங்கி வருகின்றன.

1981ம் ஆண்டு ஸ்தாபிக்கப் பெற்ற பரிபாலன சபையின் பெருமுயற்சியால் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு இன்று தீர்த்ததிருவிழா நடைபெறவிருக்கிறது.

— கே. ரி. சிவராசா

### இன்று சந்நிதி தீர்த்தம்

## வெற்றிகள் தருவாய்போற்றி

வெற்றியின் வேலோய் போற்றி
வேதத்தின் மேலோய் போற்றி
பற்றிய பாவம் போக்கும்
பரஞ்சுடர் முதலே போற்றி
வற்றிடாக் கண்ணீர் தாங்கி
வந்திடும் அடியார்க் கென்றும்
சுற்றிய படியே சென்று
அயர்களை தூயோய் போற்றி

—ஆழ்கடலான்

வடஇலங்கை மருத்துவ கல்லூரி:

# முற்றிலும் லாப நோக்கம் கருதாத ஒரு அமைப்பு!

## ஆளுநர்சபை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'வட இலங்கை மருத்துவப் பயிற்சியாளர் கல்லூரி நூறு வீதம் லாபநோக்கம் எதிர் பார்க்காததொன்றாகும். இதன் கட்டணங்களும், நன்கொடைகளும் முற்றிலும் மருத்துவக் கல்விக்கும், ஆராய்ச்சிகளுக்குமே பயன்படுத்தப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ பயிற்சியாளர் கல்லூரி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையை வட இலங்கை மருத்துவக் கல்லூரி ஆளுநர் சபையைச் சேர்ந்த டாக்டர்கள்: ரி. கெங்காதரன், ஜே. பி. ஸி. பிலிப், எஸ். நாகநாதர், ஜே ரி. சேவியர், எஸ். வாமதேவன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ளனர்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'தேர்ச்சி பெற்ற மருத்துவ சேவையாளர்களைக் கொண்ட அமைப்பே வட இலங்கை மருத்துவ பயிற்சியாளர் கல்லூரியாகும்.

இச்சங்கத்தின் கல்வி சார்ந்த நோக்கங்களில் ஒன்றே மருத்துவக் கல்லூரி ஒன்றை வடக்கில் அமைப்பதாகும்.

இக்கல்லூரி அமைப்பு ஏற்பாடுகள் அனைத்தும், பல்கலைக்கழக சட்ட திட்டங்களுக்கமையவே மேற்கொள்ளப்படுகின்றன.

அச்சட்ட அம்சங்கள் பின்வருமாறு:

பல்கலைக்கழகங்கள் சட்ட இல: 16, 1978-ம் ஆண்டு, நிறுவனங்கள் அங்கீகாரச்சட்ட இல: 4 1980, விசேட வர்த்தமானி இல: 110/7 அக்டோபர் 1980 பல்கலைக்கழகங்கள் சட்டம் இல: 7, 1985.

இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான சட்ட அம்சங்கள் குறித்து மிகவும் அவதானமாகவுள்ளனர்.

இந்நிலையில் சில தீயசக்திகள், இம் மருத்துவக் கல்லூரியை ஸ்தம்பிக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற் கொண்டுள்ளன. எனவே இக்கல்லூரி பற்றிய விபரங்கள், தகவல்களைப் பெறவிரும்பும் மாணவர்களும், பெற்றோர்களும் இக்கல்லூரியின் ஆளுநர் சபையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

தேவையான தகைமையின் நிமித்தம் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறமுடியாத மாணவர்களுக்கு, தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளச் செய்யும் வகையிலேயே இக்கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது' என்பதை அறியப்படுத்துகிறோம்.

(வி)

## கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மஹாகணபதி இன்று தீர்த்தம்

கோண்டாவில் மேற்குப் பகுதியில் பல்நெல்வயலமாக கந்தர் வளவுஎன்னுமிடத்தில் ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் அமைந்த காரணத்தால் இந்த ஆலயம் கந்தர்வளவு மாஹா கணபதி ஆலயம் என்று அழைக்கப்படுகின்றது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் விநாயகப் பெருமான் வீற்றிருந்தாலும் மூலஸ்தானத்திற்கு அருகில் இருக்கும் காளி அம்பாளின் மகிமையினால் இந்தஆலயத்தை காளிகோயில் என்றும் அழைப்பர். காளி அம்பாளும் விநாயகப் பெருமானும் அருகருகே இருந்தாயும் தனயனுமாக அருள்பாலிக்கின்ற ஒரு சிறப்பு அம்சமாக இந்த ஆலயத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்தமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒருசித்திரத் தேரை செய்யும் நோக்குடன் தேர்த் திருப்பணி சபை அமைக்கப் பட்டது. அந்தத் திருப்பணிச் சபையின் விடாமுயற்சியினால் ரூபா ஐந்து லட்சத்திற்குமேல் செலவு செய்து சித்திரத்தேரை

(8-ம் பக்கம் பார்க்க)


## என்னைச் சந்திக்க விரும்பும் இனந் தெரியாதோருக்கு வேண்டுகோள்!

07-08-85 அன்று ஒரு குழுவினரால் கடத்தப்பட்ட மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத் தலைவர் திரு. வை. இராஜசுந்தரம் அவர்கள் பற்றிய விபரம் அறியவென மேற்படி இயக்கத்தின் வலி-மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு செயலாளர் திரு. ப. சி. செல்வநாயகம் அவர்கள் ஒரு குழுவினரால் 20-8-85 இல் கூட்டிச்செல்லப்பட்டதுடன், அதேதினம் என்னுடன் கதைக்க விரும்புவதாகவும் கூறி, எனது மனைவியிடம் என்னைச் சந்திக்கக்கூடிய நேரத்தைக் கேட்டிருந்தார்கள் எனவும் அறிந்தேன். அதன்பின் அவர்கள் என்னைச் சந்திக்கவில்லை. அதேவேளை கடத்தப்பட்ட இருவரும் விடுவிக்கப்படவுமில்லை. இவர்கள் தொடர்பாக நான் அந்தக் குழுவுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறேன். அவர்கள் என்னைத் தினசரி மேற்படி விலாசத்தில் அமைந்துள்ள எமது வெகுஜன இயக்கத் தலைமையகத்தில் பகல் 12-00 மணி தொடக்கம் 2-00 மணிக்கிடையில் சந்தித்து சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளமுடியும் என அறியத்தருகிறேன்.

நன்றி.

உண்மையுள்ள
சோ. தேவராஜா,
பொதுச் செயலாளர்,

மனித உரிமைகளுக்கான
வெகுஜன இயக்கம்,
52/1 ஸ்ரான்லி வீதி, (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

301



லீடா

முழு ஆடை நிறைந்த பால்

- உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கின்றது.
- பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாத மளிக்கப்படுகின்றது.
- டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன




உடனே கறந்த பசுப்பாலின் ருசி!

பால் வெண்ணெ கூடுதலாக உள்ளது!

இணையற்ற சக்தி மிக்க பால்!


## சிநோரை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மட்டுமே அரசாங்கத்திற்கு உரித்தாகவிருக்கும் என்றும் உற்பத்தி, விற்பனை நடவடிக்கைகள், ஊழியர் சம்பளம், இடமாற்றம் யாவும் வர்த்தரீதியாக நிறுவன நிர்வாகத்தின் பணிப்பிலேயே நடைபெறுமென்றும் தெரிவித்தார்.

## வெள்ளிச்சிந்தனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதாகமங்களைப் புறக்கணித்து சைவசமய வாழ்வு வாழ விரும்புவதோ, சைவ சமயத்தை உலகில் மேன்மை கொள்ளச்செய்வதோ வேரற்ற மரமொன்றை வைத்திருந்து பூ, காய், பழம் போன்ற பயன்களைப் பெற விரும்புவதாய் முடியும்.

வேதாகம விரோதமாய் மனம்போன போக்கெல்லாம் சமய வளர்ச்சி, ஆலய வளர்ச்சி செய்ய விரும்பும் நிலை கெடும் போதுதான் நாம் உண்மை சைவ மக்களாவோம்.

பூதலமாதும் வாழ்க
பொன்மழை பொழிந்து
வாழ்க
வேதவாகமும் வாழ்க
வேந்தர் செங்கோலும்
வாழ்க
தீதில் ஐந்தெழுத்தும்
நீறும் சிவனடியாரும்
வாழ்க
வாதவூர் இறை புராணம்
படித்தவர் கேட்டோர்
வாழ்க
—திருவாதவூரடிகள்
புராணம்

-அருளாளன்


# முதலாவது நினைவஞ்சலி
(கந்தசாமிதுரை—ரவி)
(ரவி அன்ட் ராஜ் ஸ்தாபன உரிமையாளர்)



திதி:
31-08-1985
தாயின் மடியில்
22-12-59
தாயகத்தின்
மடியில்
11-9-84

இழப்பும் மீட்பும்
காலத்தின் கணக்கும்
காலனின் கணக்கும்
மீறமுடியாத
நியதிகள்தான்
ஆனால்—
அகாலத்தில்
அவலத்தில்-அவசரமாக
முடித்துவிட்ட உன்
கணக்கிற்காக-
காலதேவனை
மன்னிக்கவேமுடியாது.

ரவி...
பெயருக்கேற்ப ஒளிரும்
காந்திமிக்க உன்வதனம்
பளிரிட்டு புன்னகைக்கும்
வசீகரமுறுவல்...
ஆழமான விழிகளில்
தெறிக்கும் அறிவின்
பிம்பம்...
இவைகள்
எல்லாவற்றையும்
அவர்களால்
அழிக்க முடியுமா?
என்ன?
இருட்டறையில்
மரணித்துவரும்.
சட்டத்திற்கு

நீதி விளக்கேற்றி
சத்தியத்தை
சொலுவேற்றத்
துடித்தவனே...
இந்த நாட்டில்
சட்டமும் நீதியும்
என்றோ மரணித்து
அவற்றின் புதைகுழிமேல்
எருக்கலையும் பூத்துவிட்ட
கசப்பான உண்மையை
உன் மரணமே
உலகிற்கு பறைசாற்றி
விட்டதே...

இழப்புக்களை தாங்குவது
கடினம்தான்...
ஆயினும் 'மீட்பர்'களின்
போராட்ட வரலாற்றின்
மகோன்னத
அத்தியாயங்கள்
எழுதப்படும்போது...
உனது மரணமும்
நீ...அநாதரவாக
சிந்திய இரத்தமும்கூட
அர்த்தபுஷ்டியாகும்...
அதுவரை...உன்நினைவின்
ஆளுகையில் மௌனமாய்
அஞ்சலிப்போம்...

—பெற்றோர், சகோதரர்கள், சுற்றத்தார் நண்பர்கள்
ரவி அன்ட் ராஜ் ஸ்தாபனம்.
(302)

# கோரிக்கையை ஏற்று இளைஞர்களை உயிராபத்திலிருந்து காப்பாற்றுங்கள்

## ஜனாதிபதிக்கு வெகுஜன இயக்கம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

சிறையில் உண்ணாவிரதம் இருந்துவரும் இளைஞர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களை உயிர் ஆபத்திலிருந்து காப்பாற்றுமாறு கோரி மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

மேற்படி இயக்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளமகஜரில் கூறியிருப்பதாவது:-

"தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விசாரணை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஐந்து தமிழ் இளைஞர்கள் வெலிக்கடைச்சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். அவர்களில் மூவரின்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. மேற்படி சம்பவம் எமது இயக்கத்தை பேரதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாகியுள்ளது.

அரசியல் யாப்பின் மனித உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள அம்சங்களுக்கமையவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள தடுத்து வைக்கப்படும் 18மாத காலவரையறைக்கு அமையவும் தமக்கு நீதிவழங்கும்படி உண்ணாவிரதமிருந்துவரும் இளைஞர்களின் கோரிக்கையில் பூரணநியாயமிருப்பதாகவே எமது இயக்கம் கருதுகின்றது.

எனவே மனித உரிமைகளுக்கும் மனிதாபிமானத்துக்கும் மதிப்பளிக்கும் வகையில் தாங்கள் தலையிட்டு சாகும்வரை உண்ணாவிரதமிருப்போரின் கோரிக்கையை அனுதாபத்துடன் அணுகி, அவர்கள் எதிர்நோக்கியுள்ள உயிராபத்திலிருந்தும் அவர்களை உடன் காப்பாற்றுமாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் தங்களை வேண்டிக் கொள்கிறது."

---

### இடம்பெயர்ந்து செல்கையில்

# காட்டிலிருந்து சுடப்பட்டனர்

## இரு தமிழர் படுகாயம்

(வவுனியா)

காட்டுக்குள் ஒளிந்திருந்து சுடப்பட்டதினால் இடம்பெயர்ந்துபோய்க்கொண்டிருந்த இரு தமிழர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சின்னத்தம்பனை என்ற இடத்திலிருந்து சாமான்களை லொறியொன்றில் ஏற்றிக்கொண்டு செட்டிகுளம் பகுதியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் காட்டிற்குள்ளிருந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும், அதனால் லொறியின் பின்பகுதியில் பிரயாணம் செய்த இரு தமிழர்களும் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது. மாயழகன் (வயது 30) தவராஜா (வயது 26) ஆகிய மேற்படி இருவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

---

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தின் 36 வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு.மா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர் கல்லுகம் உதவி அரசாங்கஅதிபர் திரு.ஆ.மகாலிங்கம், தலைவர் திரு.த.சிசிவநேசன், செயலாளர் திரு.க. பரமநாதன், உபசெயலாளர் செல்வி ஆ. சிவகாமசுந்தரி, இந்து சமய வளர்ச்சித் தலைவர் திரு.வ.கார்த்திகேசு, செயலாளர் திருமதி.நே.விஜேந்திரன், விளையாட்டுத் துறைத் தலைவர் திரு.அ.இ.சுரேஸ், செயலாளர் திரு.ந.கனசிங்கம்.

---

# அரியாலையூர் சித்திவிநாயகர்

இயற்கை அழகு பொருந்திய அரியாலையில் இறைவன் குடிகொண்ட ஆலயங்கள் பல உண்டு.

இவற்றுள் வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயமாகத் திகழ்வது அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமாகும்.

நமது நாட்டிலேயே மிகப் பழம் பெரும் ஸ்தலங்களில் இதுவும் ஒன்று.

வைதீக, சைவ கலாசாரத்துக்கு யாழ்ப்பாணத்திலேயே முதன்முதல் வித்திட்டது இவ்வாலயமே என்பதற்கான சான்றுகள் உண்டு.

பழைய நல்லூர் கோவிலுக்கு முன்தோன்றியது. ஆரிய வம்ச அரசர் காலத்துக்கும் முற்பட்டது. கச்சியப்பசிவாச்சாரியாரின் கந்தபுராணநூல் தோன்றிய சமகாலத்தில் உருவானது;

விக்கிரம சோழனின் மகள் மாருதப்பிரவல்லி. மாருதப்பிரவல்லி மகன் கண்டி நாட்டை ஆண்ட அரசன்.

மணற்றிடராய் இருந்த யாழ்ப்பாணத்தை 'யாழ்பாடி' யான வீரராகவன் கண்டி அரசனிடம் பெற்று அரசாட்சிசெய்தான். வீரராகவனுடன் ஒன்றாக இலங்கை வந்த காஞ்சி கணேசையர் தான் அரியாலையில் சித்திவிநாயகர் ஆலயத்தை ஆதியில் அமைத்தவராவார்.

யாழ்.பாடி வாழ்ந்த காலத்தை கி.மு. 2ம் நூற்றாண்டு என்றும். இல்லை கி.பி. 10ம் நூற்றாண்டு என்பாரும் உளர்;

எப்படியாயினும் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தோற்றம் சுமார் (1000) ஆயிரம் வருடங்களுக்கு மேலானது என்பது துணிபு

அரியாலையில் உள்ள நீர்நொச்சித் தாழ்வு என்ற புண்ணிய பூமியில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள இவ்விறைவிக்கிரகம் பழைய சரித்திரக் காலத்து சிற்ப கலைவமைப்புக் கொண்டது என்பதனைக் காணும்போது அதுஇதன் ஆதியை உறுதிசெய்து நிற்கிறது.

அன்னியர் யாழ்ப்பாணத்துச் சைவாலயங்களை அழித்திட்ட காலத்தே இவ்வாலயம் அழியாமல் பிராமணர்களால் காப்பாற்றப்பட்டதற்கு மரபுக் கதைகள் பலவுள்ளன.

அன்று சிறியதாய் இருந்த இவ்விநாயகர் ஆலயம் 1900ம் ஆண்டளவில் ஸ்ரீமான் விஸ்வநாதர் காசிப்பிள்ளை அவர்களினால் என்றுமழியாதபடி பாரிய வெண்கற்களால் கட்டப்பட்டது. சைவாகம விதிகளுக்கமைய ஆலயப்பணி 1915ல் முடிவுற்று கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பெற்றது. 1973ல் இராஜகோபுரம் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வாலயத்துள்ளும் புறமும் அமையப் பெற்றுள்ள ஏனைய கடவுள்களின் விக்கிரகங்களும் மிகப்பழைய காலத்தவையாக இருக்கின்றன.

நன்னீர் சுற்றுடைக் கொண்டும், யோகர் சுவாமிகளின் வணக்க ஸ்தலமாக இருந்ததும்

(7-ம் பக்கம் பார்க்க)


# றெபின் சோப் ஆதரவாளர்களுக்கு!

கடந்த காலங்களில் உங்கள் ஆதரவிற்கும்,
றெபினின் தரத்தைப் பாராட்டி கடிதங்கள் எழுதியவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றி.

மூலப் பொருள்களின் விலை குறைந்துள்ளதால்

றெபின் தயாரிப்புகளின் விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேம்.

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| றெபின் பார் சோப் | 16–50 | 15–00 |
| றெபின் வெள்ளை சோப் | 2-50 | 2–20 |
| றெபின் நீல சோப் | 2–50 | 2–20 |

குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

நன்றி!

பெனின்சுலா குறூப்

9, கண்டி வீதி – நாவற்குளி.

பெனின்சுலா குறூப்பின் தரமான தயாரிப்பு

கொழுப்புக் கலப்பற்ற சுத்தமான எண்ணெயில் மேல்நாட்டு சூத்திர முறைப்படி தயாரித்த றெபின் சோப்வகைகளைப் பாவியுங்கள்!

Retail Price:




சிக்கனத்திற்கும் தூய வெண்மைச் சலவைக்கும் றெபின் சோப் வகைகளை உபயோகியுங்கள்.




ஒருமுறை பாவித்தால் மீண்டும் நாடுவீர்.
தொழிலகம் AND காரியாலயம்
9, கண்டி வீதி,
நாவற்குழி.

(285)

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45
"HELLCATS"
வயது வந்தவர்கள் மட்டும்

ஸ்ரான்லி மினி
3 'X3' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிட்லர் ஆட்சியில் மக்களுக்கு செய்த கொடுமைகளையும் அவர்கள் பட்ட துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

மே(ர்)பெயர் மினி
சினிமா
(கன்னாபிட்டி காவிலோகிள் அருகில்)
10-50, 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா
நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும் சாகசம் நிறைந்த படம்.

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
26-8-85 முதல்
5 காட்சிகள்
HELL CATS
War Film

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
THE BLUE LAGOON
(Adult Only)

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
UNCOMMON
VALOUR
கேணல் ஜேசன் ரொட்ஸ் என்பவர் வியட்நாமில் காணாமல்போன தன் மகனைத் தேடி கெரில்லா பயிற்சி பெற்ற வீரருடன் செல்கின்றார். அங்கு நிகழும் மோதல்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. Hell Cats, Code Name Wild Geeseக்குப் பின் மீண்டும் ஒருவிருந்து Action-Packed-Adventure

வெலிங்டன்
10-30, 2-15, 4-15,
6-30 p.m.
26 ம் திகதி மட்டும்
புரூசிலி நடித்த
THE
DRAGON DIES HARD
கராட்டி Film
27 - 30 வரை
அந்த ஏழு நாட்கள்
விஜோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக
ஓடுகிறது!
பாக்கியராஜ்,
சிவசந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
அம்பிகா, ஜெய்சங்கர்
நடித்த
வாசு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
(இசை) சங்கர் கணேஷ்

## இலங்கை ஆசிரியர்சங்க முயற்சியால்
# இந்திய, லண்டன் பட்டதாரிகளுக்கு விசேட சம்பள உயர்ச்சி!

(யாழ்ப்பாணம்)

'இலங்கை பட்டதாரிகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட விசேட சம்பள உயர்ச்சி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முயற்சியால், இந்திய லண்டன் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கிடைத்துள்ளது'

இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட செயலாளர் திரு. வே. சிவராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 85 ஜனவரி 1ம் தேதி முதல் வழங்கப்படவிருக்கும் இந்த விசேட சம்பள உயர்ச்சி பாக்கியை இலங்கை விஞ்ஞான பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட காலத்திலிருந்து வழங்கப்பட வேண்டுமென சங்கம் தொடர்ந்து வற்புறுத்த தீர்மானித்துள்ளது.

விசேட சம்பள உயர்ச்சி இலங்கைப் பட்டதாரிகளுக்கு மட்டும் கிடைக்கப்பெற்றது. இந்திய லண்டன் விஞ்ஞானப் பட்டதாரிகட்கும் ஏனையபட்டதாரிகளுக்கும் இவ்விசேட சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இதுபற்றிபல ஆசிரியர்கள் எமது சங்கத்துக்கு முறையிட்டனர். வடபிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை அழைத்து இவ்விடயம் பற்றி ஆராய்ந்தது.

இக்கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. மு. தியாகராசா தலைமையில் ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. இளவாலை புனித ஹென்றி கல்லூரி ஆசிரியர் திரு. ஆனந்தராசா இதன் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டார். இக்குழு ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட பாகுபாடு பற்றிய அறிக்கையைத் தயாரித்தது. பிரதேசக் கிளை இவ்வாறு பாதிக்கப்பட்ட 17 கல்லூரிகளைச் சேர்ந்த 49 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை இணைத்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தாய்ச் சங்கத்தை கோரியிருந்தது. தாய்ச்சங்க செயலாளர் எச். என். பர்ணந்து எமது கோரிக்கையை கல்வி அமைச்சுக்கு முன்வைத்திருந்ததுடன் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பட்டியலையும் இணைத்திருந்தார். தொடர்ந்து பலமுறை கல்வி அமைச்சு அதிகாரிகளை சந்தித்து வற்புறுத்தி வந்துள்ளார். இதன் விளைவாக இந்திய, லண்டன் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இவ்விசேட சம்பள உயர்ச்சியை 85 ஜனவரி 1ம் தேதியிலிருந்து வழங்கும்படி யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கல்வி அமைச்சு பணிப்புரை வழங்கியது.

## விளையாட்டு போட்டி

[கல்வியங்காடு]

குருநகர் சென். ஜேம்ஸ் றோ. க. த. வித்தியாலய வருடாந்த இல்லப் போட்டிகள் புனித ஆரோக்கியநாதர் ஆலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு ஞா. அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியை வாழ். மேற்றிராசனப் பங்குத் தந்தை அருட் திரு. கில்லறி ஜெ. ப. நேசன் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி சிவானந்தன் பரிசில்களை வழங்கினார்.

போட்டியில் மஞ்சள், பச்சை, நீலம் இல்லங்கள் பங்குபற்றின.

## அரியாலையூர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாலயத்தின் சிறப்புக்களில் அடங்குகின்றன.

முறையாகப் பூசித்து கேட்கும் சித்திகளை அடியார்க்கு இலகுவாக நல்குபவர்தான் சுத்திவிநாயகர்.

எனவேதான் தமிழரல்லாமல் ஜப்பான், சீனா, கிரேக்கம், எகிப்து முதலிய நாடுகளிலும் இவர் வழிபாடு நிலவுகிறதுபோலும்.

காரிய சித்திலை, அடியார்க்கு அரியாலையில் வீற்றிருந்து அருளிக்கொண்டிருக்கும் சித்தி விநாயகர் ஆலய தேர் உற்சவம் நேற்று நடைபெற்று இன்று தீர்த்தமும் இடம்பெறுகின்றது.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
OPERATION
DAY BRAKE

"லதா" மினி
(கோண்டாவில்)
THE LONGEST
BRIDGE
War Film

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
NEW YORK NIGHTS
(வயது வந்தோர் மட்டும்)

## புனித சவேரியார் 11-ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி செப்டம்பர் 11-ம் திகதி மூன்றும் தவணைக்காகத் திறக்கப்படும் என்றுமாவட்டக்கல்விப்பணிப்பாளர் செல்வி ப. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

மூன்றும் தவணைக்காகப் பாடசாலைகள் செப்டம்பர் 2-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக இருப்பது தெரிந்ததே.

## பழைய மாணவர் வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பத்திரிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படிக் கூட்டம், பழைய மாணவர் சங்கக் கட்டிடத்தில் தலைவர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் நடைபெறவிருப்பதாகவும், இப்பொதுக் கூட்டத்தில், பல முக்கிய பிரச்னைகள் விவாதத்துக்கு எடுக்கப்படவிருப்பதாகவும், மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி திரு ஜி. ஆர். ராஜலிங்கம் தெரிவித்தார். (வி)

## முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

[கொழும்பு]

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் இன்று கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

இலங்கைக் கோஷ்டிக்கு வீரர் டுலீப் மெண்டிஸும், இந்தியக் கோஷ்டிக்கு வீரர் கப்பில்தேவும் தலைமைதாங்குகின்றார்கள். [வி]

## மருந்துக்கலவையாளர் சங்கக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் 14-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பொஸ்ட் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சங்கச் செயலாளர் திரு எஸ். எம். கந்தசாமி செய்துள்ளார்.

## "இன்றைய சூழலில் வடபகுதி விவசாயிகளின் சேவை பாராட்டுக்குரியது"

– யாழ் விவசாயப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

'இன்றைய நாட்டு நிலைமையிலும் வட பகுதி விவசாயிகள் தம்மை எதிர்நோக்கும் உற்பத்திப் பிரச்னைகள், சந்தைப் படுத்துவது கஷ்டங்கள் இருந்த போதிலும் தடங்கலின்றி விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்' என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ண பிள்ளை தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தின் 'விவசாயக் கருத்தரங்கும் செய்முறை விளக்கங்களும்' என்னும் கருத்தரங்கு வைபவம் அண்மையில் சங்கானை பொதுநூல் நிலைய மண்டபத்தில் சங்கானை ப. நோ. கூ. சங்க ஆதரவில் மன்றத் தலைவர் திரு. பொ. செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

விழாவை சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. வ. யோகானந்தசிவமும், சங்கானை பட்டினசபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. நா. குமாரசாமியும் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். சங்கானை விழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர் திரு. ஜி. சிதம்பரநாதன் தமதுரையில், "தனிமனித வாழ்வுக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் உணவுற்பத்தி பலமும் ஆத்மீக பலமும் அவசியம் பல இன்னல்களுக்கு மத்தியில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தி வரும் விவசாயப் பெருமக்களுக்கு பொது மக்களின் ஆதரவு மிகவும் அவசியம்' என வலியுறுத்தினார்.

யாழ் பெரும்பாக உத்தியோகத்தர் திரு பி. சூசைப்பிள்ளை, விவசாய போதனாசிரியர்கள் திரு. ரி. ஜி. ரி. சோமநாதர், திரு. கதிரமலை ஆகியோரது சேவைகளைப் பாராட்டி விவசாயிகள் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர். சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவ மாணவிகளினதும், வட்டு. இந்துக் கல்லூரி மாணவ மாணவிகளினதும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [ச]

# துப்பாக்கிச் சூடு: இளம் பெண் பலி!

(வவுனியா)

பௌத்த விகாரையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஊர்காவல் படை வீரர் ஒருவருடைய துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினால் 18 வயதுடைய ஹேமாவதி என்ற இளம்பெண் ஸ்தலத்திலேயே மரணமானார்.

வவுனியா கண்டி வீதியில் உள்ள பௌத்த விகாரைக்குள் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மரணமான இளம்பெண் மாமடுவ என்ற இடத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

## பாதிக்கப்பட்டோருக்கு உடன் உதவியளிக்க நிதிவசதி இல்லையாம்

(வவுனியா)

வவுனியாவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் உதவிகளைச் செய்யும் நிலையில் வவுனியா பிரஜைகள் குழுவின் நிதிநிலைமை போதுமானதாக இல்லை என்று குழுத் தலைவர் சட்டத்தரணி திரு. எக்ஸ். சொர்ணபாலா தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக உயிர் இழப்பு, வீடு எரிப்பு, சூறையாடல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட பிரஜைகளுக்கு நிதியுதவிகள் முன்புவழங்கப்பட்டன. ஆனால் இவைகள் யாவும் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவத்தின் எதிரொலியாகப் பாதிக்கப்பட்டவர்களை அகதி முகாம்களில் வந்து தங்கி இருக்கும்படி மேற்படி குழுத் தலைவர் கேட்டுள்ளார். (க)

## வவுனியாவில் தொடர்ந்து பதற்றநிலை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள அனைத்து அரச அலுவலகங்களும் இப்பொழுதும் நண்பகலுடன் மூடப்படுகின்றது.

நகரில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமையை இதற்குக் காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

பகல் 10 மணியுடன் நகரில் சனநடமாட்டம் குறைந்து விடுகிறது. 12 மணியுடன் நகரே வெறிச்சோடிக்கிடக்கின்றது.

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# காட்டுவளம் அழிதல்: 'ஈரோஸ்' நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காட்டுவளம் கண்டபடி அழிக்கப்படுவதனையும் கள்ள மரம் கடத்தப்படுவதையும் வன்மையாக கண்டனம் செய்துள்ள முல்லைத்தீவு பிராந்திய ஈழப்புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) கள்ளமரம் தறித்தலை கட்டுப்படுத்த செப்டம்பர் 15-ம் தேதியிலிருந்து தீவிர நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

ஈழப்புரட்சிகர அமைப்பு வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துண்டுபிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''விடுதலைப் போராட்டம் நடாத்தப்படும் இக்காலகட்டத்தில், எமது நாட்டின் வளத்தை கட்டுப்பாடற்று அழிப்பதனுல் எமது நாடு பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது வளம் அழிக்கப்படுவதனுல் எதிர்காலத்தில் காலநிலை மாறுதல்கள் ஏற்படும் போராடி பெறவிருக்கும் எமது நாடு பாலைவனமாகிவிடும். அழிக்கப்படும் காடுகள் மீண்டும் வளர நெடுங்காலம் ஏற்படும் பருவமழை பாதிக்கப்படுமானுல் வரட்சிநிலை ஏற்பட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும் (சு)

## கோண்டாவில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை வெள்ளோட்ட வைபவம் நடைபெற்றது. இத்தச் சித்திரத் தேர் அமைப்பதற்கு மூன்றரை லட்சரூபா கோண்டாவில் பொதுமக்களிடம் இருந்தும் ஒரு லட்சம்ரூபா இப்பகுதியை சேர்ந்த வெளிநாடுகளில் வசிக்கும்பெரியோர்களிடம்இருந்தும்வசூல்செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது இதன் பலனுக நேற்றுப் பகல் விளுயகப் பெருமான் வாளி அம்பாள் சகிதமாக சித்திரத்தேரில் வந்து காட்சி எல்லா அடியார்ளின் உள்ளங்களையும் மகிழவைத்தது. இதைத் தொடர்ந்து இன்றுநீர்தோற்சவவைபவமும் நடைபெறுகின்றது.

— கு. சண்முகலிங்கம்

**மரண அறிவித்தல**

**கார்த்திகேசு முத்தையா**

அன்னரது ஈமக் கிரியைகள் முன்னர் அறிவித்தது போல் அல்லாமல் சனிக்கிழமை 31-8 85 காலை 9-00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறேம். (300)

**மரண அறிவித்தல்**

**சின்னப்பு செல்வராஜா**

(செல்வா ரவல் ஏஜென்ஸி உரிமையாளர்)

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த சின்னப்பு செல்வராஜா புதன் காலை காலமானுர். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தகுமார் (Madras) ஜெயக்குமார், ராகினி (ஆசிரியை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை), அனுஷா (யாழ் இந்து மகளிர் கல்லூரி A-L) ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்குணநாதனின் (சவூதி) சிறிய தந்தையும், சுப்பிரமணியம் (சிங்கப்பூர் சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

296 கோ. பொன்னுத்துரை

**மரண அறிவித்தல்**

**திருமதி**

**சுப்பிரமணியம் சிவபாக்கியம்**

யாழ்ப்பாண மாவட்ட வளர்ந்தோர் கல்வி அதிகாரியும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்க வடபிராந்திய ஆணையாளருமாகிய திரு. சி. எஸ் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (பொறியியலாளர், சங்கிலிப்பாலம்), நிமலேந்திரன், யோகேந்திரன், ஜீவேந்திரன், சத்தியா, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயருமாகிய 'சிலம்பின் அன்னை' காங்கேசன்துறையை வசிப்பிடமாகக் கொண்ட சிவபாக்கியம் சிவபதமடைந்துவிட்டார் அன்னரின் ஈமக் கிரியைகள் சனிக்கிழமை 31-8 85 மாலை 4-00 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேம்.

(299) தகவல்: சி எஸ் சுப்பிரமணியம்

[illegible] Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu 1, Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,

# லொறியுடன் அரிசி, எள்ளு மூடைகள் மீட்பு

(வவனியா)

வவனியா - சின்னப்புதுக்குளத்தில் உள்ள ஒரு பிரபல அரிசி ஆலையிலிருந்து இம்மாதம் 23ந் திகதி கொள்ளையடிக்கப்பட்ட அரிசி மூடைகளும், எள்ளு மூடைகளும் அத்துடன் அங்கிருந்து கடத்தப்பட்ட லொறியும் பொலிசாரினுல் சிங்களக் கிராமம் ஒன்றில் வைத்து மீட்கப்பட்டதுடன் கொள்ளையர் மூவர் கைதாகியுள்ளனர்

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

சம்பவதினம் இரவு ஒரு கோஷ்டியினர் மேற்படி அரிசி ஆலைக்குச் சென்று வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, ஆலைக் காவலாளியினையும் மற்றவர்களையும் பயமுறுத்தி அங்கு நின்ற ஆலை உரிமையாளருக்குரிய லொறியில் 30 மூடை அரிசியையும், 35 எள்ளுமூடையையும் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

குறித்த அரிசி ஆலை உரிமையாளர் பொலிசாருக்கு புகார் செய்ததினை அடுத்துபொலிசார் நடத்திய விசாரணையின்போது கடத்தப்பட்ட லொறி சிங்கள கிராமம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

## போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் முன்னிலையில் அடகுவைத்தோர்சங்கம் தங்கள் நகைகளை மீளத்தருமாறுகோரி நடாத்திவரும் மறியல் போராட்டம் இன்றும் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (மா)

## பாலசிங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையாகக் கோருவாராஞல் அவரது மனு பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்றும், அநேகமாக அவர் மீதான தடை உத்தரவும் விலக்கிக்கொள்ளப்படலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தன.

இதேவேளை தமது நாடு கடத்தல் உத்தரவை வாபஸ் பெறுமாறு திரு பாலசிங்கம் இந்திய அரசைக் கேட்டுள்ளார்.

அதேநேரத்தில்; டாக்டர் பாலசிங்கம் மீதான தடை உத்தரவை நீக்குவது பற்றி இந்திய மத்தியஅரசு ஆழமாகப் பரிசிலனை செய்து வருவதாகவும் மேற்படி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

## பல்கலைக்கழக...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளின் நலன்களை பிரத்தியேகமாக கவனித்து வருகின்றனர் என்று உண்ணுவிரத அமைப்புக்குழு பிரதிநிதியொருவர் கருத்து தெரிவித்தார்.

மேலும் அவர் தமது கருத்தில், ''தாங்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்வரை மாணவர்களின் போராட்டம் தொடரும். இதற்கு முழுமையான ஆதரவு தெரிவித்து பலஇடங்களிலும் அடையாள உண்ணுவிரதங்கள் நிகழுகின்றன. இப்போராட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் கடந்த புதன்கிழமை பல்கலைக்கழகத்தில் அன்னையர் முன்னணி, மாதர் மறுமலர்ச்சிப் பேரவை, வடமாகாண ஆசிரியர் சங்கம் உட்படப் பல அமைப்புக்கள் கலந்துரையாடிய கூட்டத்தில் போராட்டத்தின் அவசியம்பற்றி வலியுறுத்தப்பட்டது.

தொடரும் மாணவர்களின் உண்ணுவிரதத்திற்கு பல்வேறுபட்ட அமைப்புகளும், தனிப்பட்டோரும் தொடர்ந்து நல்லாதரவு அளித்துவருகிருர்கள். 3வது தினமாகிய நேற்று ஐம்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் ஆதரவுதெரிவித்து பல்கலைக்கழகத்தில் அடையாள உண்ணுவிரதமிருந்தனர்

வெலிக்கடைச் சிறையில் உண்ணுவிரதம் அனுஷ்டித்து வரும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் சுரேஸின் தாயாரும் நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவரின் உண்ணுவிரதப் போராட்டத்தில் தமது இளைய மகனுடன் பங்குபற்றியருந்தார்.

முதலாம் கட்ட உண்ணுவிரதப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு முடிவடையுமெனவும் அதைத் தொடர்ந்து 2ம் கட்டம் ஆரம்பமாகுமெனவும் இப்பிரதிநிதி தெரிவித்தார். இரண்டாம் கட்ட உண்ணுவிரதத்தில் பங்கு கொள்ள அதிகமானேர் விண்ணப்பித்திருக்கின்றனர். ஆயினும் அமைப்புக்குழு குறிப்பிட்ட தொகையினருக்கே அனுமதி வழங்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

## சந்திரகாசன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யானது பற்றி தி மு. க தலைவர் கலைஞர் மு கருணுநிதி நேற்று திருச்சியில் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் திரு சந்திரகாசன், திரு சத்தியேந்திரா, டாக்டர் பாலசிங்கம் ஆகியவர்கள் மீது விதிக்கபபட்டுள்ள வெளியேற்ற உத்தரவை விலக்கிக்கொள்ளும்படி கோரியே தாங்கள் போராட்டம் நடத்திவருவதாகக் குறிப்பிட்டார்.

இதே சமயம் திரு. சந்திரகாசனை நாட்டைவிட்டு வெளியேறும்படி விடுத்த உத்தரவை விலக்கிக் கொண்டமைக்காக த. கூ. செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

டாக்டர் பாலசிங்கம் மீதான தடை உத்தரவையும் விலக்கிக் கொள்ளவேண்டு எனக் குறிப்பிட்டுள்ள திரு அமிர்தலிங்கம்; இந்த உத்தரவு தமிழ் ஈழத்தலைவர்களிடையேபெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது என்றும் அவர் மீதான உத்தரவையும் விலக்கிக் கொண்டால் பெரும் ஆறுதல் ஏற்படும் என்ருர்

திரு சந்திரகாசன் விடுவிக்கப்பட்டது குறித்து யாழ். முன்னுள் எம் பி திரு வெ. யோகேஸ்வரன் இந்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்

டாக்டர் பாலசிங்கத்திற்கெதிரான தடை உத்தரவை விலக்கிக் கொள்ளுமாறு அவர் கேட்டுக்கோண்டார்.

## சந்திரகாசன் கருத்து

'இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் மத்திய அரசுடன் இணைந்து ஒத்துழைப்பு நல்கி, பாடுபட, தயாராக உள்ளேன்'' என்று திரு எஸ் சி சந்திரகாசன் சென்னையில் தெரிவித்துள்ளார்

உத்தரவு வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து திரு சந்திரகாசன் பம்பாயில் இருந்து நேற்றுமாலை சென்னை திரும்பினுர். சென்னையில் அவர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் 'விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்து முடிந்தது. அதை மறந்து விடுவோம். டாக்டர் திரு எஸ், ஏ பாலசிங்கம், திரு என் சத்தியேந்திரா ஆகியோர் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவுகளையும் இந்திய அரசு கூடிய விரைவில் நீக்கிவிடும் என்று எதிர்பார்க்கின்றேன் ''தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த டாக்டர் பாலசிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச்சேர்ந்த திரு சத்தியேந்திரா ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள முடியாதநிலை ஏற்பட்டால், ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த நான்குஅமைப்புக்களும் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்வதில் தடைகள் ஏற்படலாம். தமிழ் ஈழத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் ஒத்துழைத்து செயல்பட்டால் இனப்பிரச்னைக்கு நல்லதொரு முடிவு ஏற்படும்'' என்று தெரிவித்தார்.

## ராதா காலமானுர்

(சென்னை)

பிரபல தமிழ் நடிகர் திரு. எம். கே. ராதா நேற்று முன்தினமிரவு சென்னையில் காலமானுர்.

75 வயதுடைய திரு. ராதா சுமார் 35 வருடங்களாக சினிமாவில் நடித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

## இன்று ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறையில் உண்ணுவிரதமிருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகஇன்று பாஷையூர் அந்தோனியார் கோவிலில் இருந்து பொதுமக்கள் ஊர்வலம் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதியில் திருட்டு

(வவனியா)

வவனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள தொலைத்தொடர்பு திணைக்களத்தில் பணிபுரியும் உயர் அதிகாரி ஒருவருடைய விடுதியில் பெறுமதியான பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

## திரியாய் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்களை வாங்கிச் செல்கின்ருர்கள்

இக் கிராமங்களுக்கும் திருமலை நகருக்குமிடையில் சிறியாபுரம் என்ற சிங்கள கிராமம் இருப்பதால் தமிழ்மக்கள் அச்சிங்கள கிராமத்தினூடாக நகரத்திற்கு வர அச்சமடைந்துள்ளனர் எனக்கூறப்படுகிறது.

சிறிமாபுரத்தில் தற்போது சுமார் 100 சிங்களக் குடும்பங்கள் மட்டும் இருப்பதாகவும் மற்றவர்கள் அச்சத்தினுல் வெளியேறி சொந்த இடங்களுக்கு சென்றுவிட்டதாகவும் சில குடும்பங்கள் அகதிமுகாம்களில் இருப்பதாகவும் கூறப்படுகிறது

## திட்டமிட்டபடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு டாக்டர் ஏ எஸ். பாலசிங்கம், திரு என் சத்தியேந்திரா ஆகியோர் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளும் வாபஸ் பெறப்படும்வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்

தமிழ் ஈழம் ஆதரவாளர்கள் கழகத்தில் தி மு க. திராவிடர் கழகம், காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது (ரா

## எம். ஜி. ஆர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரனும் உடன் இருந்தார்.

பிரதமரைச் சந்திக்கும்படி தங்களை முதல்வரும் திரு. மூப்பனுரும் கேட்டுக்கொண்டதாக ஈழம்தேசியவிடுதலை முன்னணியின் தலைவர் ஒருவர் கூறினுர்.

தமிழ் அமைப்புகளின் சார்பில் திரு. முரளி. திரு. பாலகுமார், திரு சார்ள்ஸ், திரு. பத்மநாபா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் பின்னர் திரு மூப்பனுர் திரு எஸ். ராமச்சந்திரனுடன் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

இலங்கைத்தமிழர் விடயமாக பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் பேச்சு நடத்துவதற்காக திரு. மூப்பனுருடன் திரு. ராமச்சந்திரனையும் முதல்வர் அனுப்பியுள்ளார்.

## இலங்கையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றப்பட்டுள்ளேன், இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்களின் படுகொலைகள் பற்றிய அறிக்கையை சென்னையில் விடுத்தேன் 'திம்பு' பேச்சுவார்த்தைகள் முறிவுற்றமைக்கும் முக்கிய பங்களிப்பு ஆற்றியுள்ளேன்'';

(இ - அ)